DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 213/2016 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 5 | Caste | : |
| Name | : பாண்டி | Calling | : |
| Father / Husband Name | : ராமசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 06th August 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்சமயம் அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். நான் கடந்த 30.01.2015 ம் தேதி 15.00 மணிக்கு காளையார்கோவில் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் அ.சா.1 நிலைத்தில் ஆஜராகி இவ்வழக்கு எதிரி சரத்குமார் என்பவரை தனது சைக்கிளுடன் இண்டேன் கேஸ் காலி சிலிண்டரை திருடிச் சென்றதை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்து கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 32/2015 பிரிவு 379 இதச வின் கீழ் வழக்குப் பதிவு செய்தேன்.

2) **(இந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** முதல் தகவல் அறிக்கையினை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் குற்றவியல் நீதிமன்றம் எண். 1, சிவகங்கை அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்பு எதிரியையும் புகார்தாரரையும் விசாரணை செய்து அவருடன் வந்திருந்த அ.சா.2 யையும் விசாரணை

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.08.06 00:56:44 +0530

செய்து வழக்குச் சொத்துக்களான இண்டேன் கேஸ் காலி சிலிண்டர் மற்றும் சைக்கிளை படிவம் 91 மூலம் கைப்பற்றி அ.சா.1, அ.சா.2 விடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) எதிரியை 15.45 மணிக்கு கைது செய்து கைது விவரத்தை உறவினர்க்கு தெரிவித்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்றக் காலுக்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR எண். 117/2015 பெறப்பட்டுள்ளது. அன்றைய தினமே 30.01.2015 ம் தேதி 16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று வழக்கு சாட்சிகளான அங்குச்சாமி, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சாட்சிகள் துரைராஜ், பாலமுருகன், புவனேஸ்வரி, பரமேஷ்வரி, வீரனசாமி, அங்குச்சாமி, ராஜேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) மேற்படி சாட்சிகளை விசாரணை செய்தததில் இருந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்தும், சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும், புலன் விசாரணையிலிருந்தும் சம்பவத்தில் எதிரி ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எனது விசாரணையை முடித்துக்கொண்டு எதிரி மீது நிலையக் குற்ற எண். 32/2015 பிரிவு 379 இதச படி குற்ற இறுதி அறிக்கையை 12.02.2015 ம் தேதியன்று கனம் நீதித்துறை நடுவர் எண். 1, சிவகங்கை அவர்கள் முன்பாக தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சிலிண்டர் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றால் புகார்தாரரின் அம்மாவான சாட்சி பரமேஷ்வரி என்பவர் பெயரில் உள்ளது. சிலிண்டர் பதிவு புத்தகத்தை விசாரணையில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். காணாமல் போன சைக்கிள் எந்த வகை மாடல் சைக்கிள் என்று புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை புகார்தாரர் தான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் என்றால் சரிதான். எதிரியை பிடித்த இடத்தில் உள்ள நபர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல பாலமுருகன் என்பவரை விசாரணை செய்தேன். சாட்சி பாலமுருகன்

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.08.06 00:56:58 +0530

புகார்தாரரின் மைத்துனர் என்றும் தனி நபர் சாட்சி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள், தேதி, இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் புகார் எதுவும் கொடுக்கபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் புகாரைப் பெற்று சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் வழக்கிற்கு தோதாக அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இந்த எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.06 00:57:11 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.